

# அமரர்
# அ. அமிர்தலிங்கம் அவர்களின்
# ஆத்ம சாந்தி அஞ்சலி

23.9.89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# அ. அமிர்தலிங்கம் அவர்களின்

# ஆத்ம சாந்தி அஞ்சலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின்
ஆத்ம சாந்தி அஞ்சலி.

# தேவாஞ்சலி

வாரண தேவா! வாவா!
வண்டமி ழிறைவா! வாவா!
வானிடைப் புகுந்த மன்னன்
வரலாறு சொலவே வாவா!.

காரண வடிவாய்த் தோன்றும்
கல்வியின் தாயே! வாவா!
காவலன் மறைந்த காதை
கற்பிக்கும் அருளே வாவா!

மாரண அசுரன் தன்னை
மாய்த்த வேலவனே! வாவா!
மண்டலம் மறவா நாதன்
மாண்பினை வழுத்த வாவா!

நாரண முரளீ! வாவா
நாம் தோழும் இறைவா வாவா!
நல்லருந் தலைவன், புகழை
நவின்றிடத் தமிழாய் வாவா!

அன்னைசெந் தமிழே வாவா!
அதிரச மொழியே வாவா!
உன்னை முன் அழைத்தேன் வாவா!
உண்மைகள் உரைக்க வாவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பு..ம்பல்

"மங்கையர்க்கரசி"யாம் நின் மனைவியார்
மஞ்சளும் குங்குமமும் மாங்கல்யமும்
கங்கையில் விட்டின்று காணுகிறார்
கதறிநின் பிரிவினால் வாடுகின்றார்!

அங்கமெல் லாங்குழைந் தலறுகின்றார்
ஐயகோ! நின்னையே தேடுகின்றார்
இங்கவர் படுகின்ற துயரமெல்லாம்
எம்மினம் அடைகின்ற அவலமன்றோ!

புத்திரர் இருவரும் புயமிழந்தார்
போலவே தந்தையின் துணையிழந்தார்
சித்திரம் செய்துமைச் சிரசில் வைத்தார்
சேவித்து மன்றாடி நெஞ்சில் வைத்தார்!

"ஞானஷியாமளா" நின் மருமகள்
நம்பியே தந்தையைப் போலு மேலாம்
ஆனதோர் ஸதானத்தி லேயமர்த்தி
"அப்பா" எனச் சொல்லும் அன்புகொண்டாள்.

தாங்கவொண்ணாது நின் பிரிவினாலே
தஞ்சம் இழந்தன்ன வெந்து நின்றாள்
நீங்கவொண்ணாத நின் நினைவினாலே
நீடும் மனத்துயர் மிஞ்சுகின்றாள்!

"மலர்விழி"யாம் உங்கள் இளமருமகள்
வற்றாத கண்ணீரில், நித்தமுந் தான்
அலறியே தேம்பிநெஞ் சகமுடைந்தாள்
அண்ணலே நினைமீண்டும் அழைத்துநின்றாள்!

பிரியமும் பாசமும் தழுவுமன்பும்
பேரிழப்பானதைப் புரியாதவள்
அரியதோர் பேத்தியாம் "சுதந்திரா" வோ
அறியாத பிள்ளை நின் வரவை மீண்டும்

காத்திருக்கின்றாளே! நாளை எண்ணிக்
கதி என்ன ஆகுமோ வரவில்லையேல்
பார்திருக்கும் எங்கள் உள்ளமெல்லாம்
பரதவிக்கின்றதே ஐயா ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமதை வளநா டாக்கும்
இந்தியநல் வம்சத் தமிழர்
வாழவழி வைப்போம் இங்கே
மீள விடோம் தென்றுடென்றே

மேடைகளில் ஏறிநின்றே
மெய்சிலிர்க்க வாதம் செய்தீர்!
கோடையில் வசந்தங் காணக்
குளிர்மேகக் குரல் கொடுத்தீர்!

தந்தை சொலே மிக்க வுண்டோ
மந்திரமென் றெண்ணினையோ
தந்தை யவர் செல்வா சொல்லைத்
தலைமீது கொண்டனையோ!

விந்தை மிகு வாதத்தாலே
வியந்திடவூ ருலக மெல்லாம்
பந்தமுட னுரிமைக்காகப்
பணியாற்ற முன்வந்தீரே!

ஐம்பத் திரண்டா மாண்டில்
அறிவுடைக் கல்விமானய்
நம்பத்தும் உரிமை நாட்டில்
நாம்காண வேண்டு மென்றே

சட்டத்து அரணி யாகிச்
சத்தியப் பிரமாணத்தால்
பட்டமும் பெற்றீர் ஐயா!
பைந்தமிழ் இனத்துக் கென்றே.

ஐம்பத்திரண்டில் தேர்தல்
ஆரம்பப் படியில் ஏறி
நம்பத்து நன் மானிலமும்
நல்லாசி முன்னே கூறித்

தேற்றிடவே வட்டுக்கோட்டைத்
தேர்தலருந் தொகுதி தன்னில்
தோற்றினீர் தோற்றீர் ஆயின்
தோல்வியையே ஜெயமாய்க் கொண்டீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நங்கையர்க் கரசியாளை
நல்லிசைக் குயிலினாளை
மங்கையர்கரசி தன்னை
மணமுறக் காதல் கொண்டீர்

பங்கய வதனி யாளைப்
பரிவுடன் மணந்து கொள்ள
மங்கள முறையிற் தந்தை
வல்லிபுரம் அவரைக் கண்டீர்!

பெண்கேட்டுப் பிரியம் பெற்றீர்
பேரின்ப மணமும் செய்யப்
பண்பட்ட தமிழர் மாண்பிற்
பாரம் பரியத்தோடே!

ஐம்பது நான்காம் ஆண்டில்
ஆவணிப் பதன்மூராம் நாள்
செம்பத்து நலமும் சேரும்
சீரிய முகூர்த்தம் தன்னில்

திருமணமே செய்தீர் ஐயா!
தெய்வீகத் திருமணந்தான்!
ஒருமணம் நாம் கண்டதில்லை
உங்கள்திரு மணத்தைப போலே!

மீண்டும் பாராளும் மன்றம்
விரையவே தேர்தல் நாட
ஆண்டதாம் ஐம்பத் தாறில்
அதே வட்டுக் கோட்டை தொகுதி

தன்னிலே போட்டியிட்டீர்
தமிழரசுக் கொடியை நாட்டி
உன்னியே வெற்றி கொண்டீர்!
உச்சிமா மலையில் நின்றீர்!.

ஐம்பத்து ஆறும் ஆண்டில்
ஐயனே! நின்றன் ஆற்றல்
கம்பத்தின் நுனியிற் காணும்
கலங்கரை விளக்கமாமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் மட்டும் என்னும்
தீயதோர் "மசோதா" மீது
பொங்கியே எழுந்தீர் "மன்றம்"
பூகம்ப மாகத் தானே!

மாறிட வாதஞ் செய்தீர்
மாற்றாரின் கூட்டம் நெஞ்சம்
மாறிடப் போதஞ் செய்தீர்!
மறந்திட மாட்டோம், ஐயா!

அத்திரு ஆண்டிலே தான்
அன்புள்ள முதல்வனாகப்
புத்தரன் காண்டீபனை யோர்
பூரண வரமாய்ப் பெற்றீர்!

ஜெனீவாவில் ஐம்பத் தேழில்
ஜெகமெங்கும் தமிழர் மாண்பைத்
தனிமார்பு தட்டிப் பேசிச்
சரித்திர நாயகனாய் நின்றீர்!

ஐம்பத்து ஒன்பதா மாண்(டு)
அதனிலே இளைய மகனும்
பகீரதன் தன்னைப் பெற்றீர்
பாரியா ரோடின்புற்றீர்.

தமிழினத் "தந்தை - செல்வா"
தந்ததோர் தலைமைப் பீடம்
அமர்தமே! நாட்டில் நின்றன்
ஆற்றலைக் காட்டிற்றன்றோ!

எழுபத்து ஆறில் தந்தை
எமைவிட்டுச் சென்ற பின்னே
முழுமைக்கும் நீரே ஆனீர்!
முன்னேதான் காலை வைத்தீர்!

எழுபத்து ஏழாம் ஆண்டில்
எழுச்சிபெற் றெழுந்த மக்கள்
முழுமைப்போ ராட்டம் தேர்தல்
முடிபிலே கண்டீர் ஐயா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினில் ஆண்டுக் காண்டாய்
நடந்தமா கோரச் செயல்கள்
ஈட்டிய கலவரங்கள்
எல்லாமே எண்ணி யெண்ணி

வீட்டினில் இருந்தீ ரில்லை
வீற்றிருந் துண்டீ ரில்லை
வாட்டமுற் றுறங்கவில்லை
வன்செயல் ஆட்சி கண்டே!

கொட்டிய குருதி வெள்ளம்
கொலைகளால் அருவியாகி
மூட்டிய கடலில் ஊறி
முழ்கியே சங்கமிக்கும்

பட்டியற் துயரங் கண்டீர்
பரதவித் தகில மெங்கும்
எட்டியே எங்கள் துன்பம்
எய்திடச் செய்ய வென்றே

இந்திய மண் ணடைந்தீர்
இம்சைகள் தம்மை விண்டீர்!
அந்திய காலம் மட்டும்
அன்னையின் பணியே கொண்டீர்

அண்டமெல் லாமே சென்றீர்
அறிவிக்க அநியாயத்தை
லண்டனில் வந்திருந்தும்
நங்குல நலிவு சொன்னீர்!

எண்பத்து எட்டாம் ஆண்டில்
ஈற்றினில் "லண்டன் கிளையில்"
இயக்கமோர் நல்லியக்கம்
என்றெமை ஊக்குவித்தீர்

அத்துடன் இங்கிருக்கும்
அத்தனை தமிழருக்கும்,
"இத்துடன் இலங்கை செல்வேன்!
எம்பணி தொடர்வேன்" என்றீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிய சொல்லின் படியே
துணைவியா ளுடனே சென்றீர்
வல்லிய பயங்கரத்தில்
வாழ்வையும் துச்சமாக்கி!

முன்னரும் பெரு முழக்கம்
மொழிந்த நின் வருகை கண்டு
அந்நியர் ஆட்சி மன்றம்
அதிசயங் கொள நுழைந்தீர்!

தன்படை ஏது? அன்றி
மாற்முனின் படைதான் ஏது?
என்பது புரியா நிலைமை
ஏற்பட்டதாலே இன்று

முன்பினும் அழிவால் நாடு
முற்றிலும் கொடுமை யாகி
அன்பிலா நரகம் போலே
ஆனது கண்டு நொந்தீர்.!

கொழும்பினில் யோகேஸ்வரனைக்
கூட்டியே துணையாய்க் கொண்டு
அழுந்துயர் மாறத் தமிழர்
அமைதிக்கு நலமே செய்தீர்!

உலகினில் ஒரு "மகாத்மா"
உன்னத காந்தி- "ஆத்மா"
விலகிவிட் டகன்ற தொப்ப
வேந்தே! நின் பிரிவு கண்டோம்

வயதுனக் காகவில்லை
வாழலாம் பன்னு ளின்னும்
தய்வுனக் கிருந்ததாலோ
தலைவெடிப் பட்டே மாண்டீர்!

எதிரியைத் தானும் நின்றன்
இனியதோர் நண்பனுகக்
கருதியே வாழ்ந்ததாலோ
கனல் வெட்டிப் பட்டே மாண்டீர்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையவள் மடியில் வைத்தே
மங்கள மாங்கல்யந் தான்
நனையவே கண்ணீர் சிந்தி
நலிந்தழ மறைந்தனையோ!

பரவிடும் அழிவு நாலாம்
பக்கமும் குமுறி நாளும்
நரகமாய் உழலு தன்றோ!
நாடுதான் உமை இழந்தே!

------------*******-----------

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகப் பரணி

அரனடி சென்றடைந்தீர்
அமரரே! அமிர்தலிங்கம்!
சிரமதே தாழ்த்தி நின்றன்
சீரிய சரிதை விண்டோம்!

நரகமாய் மாறி அந்தோ!
நாடுதான் உமை யிழந்தே
பரதவித் துழலுதையா!
பறந்துவா னடைந்தனையோ!

தந்தையாம் அப்பாப்பிள்ளை
தாயவள் வள்ளியம்மை
முந்திய தவத்தா லீன்ற
முதல் மகன் நீவீரன்றே!

ஆவணி இருபத்தாறில்
ஆண்டதாம் இருபத்தேளில்
மாமணித் தமிழின் தலைவா!
மானிலத் தவரித்தீர்!

சோதரர் சொக்கலிங்கம்
துணை வாசுதேவலிங்கம்
தீதிலாத் தம்பியான
திகம்பரலிங்கம் ஆக

நால்வராய்ப் பிறந்தீர் ஐயா!
நலமுடன் வாழ்தீர் ஐயா!
மேல்முறைக் கல்வி யாவும்
மேம்படக் கற்றீர் ஐயா!

நாற்பத்து ஒன்பதான
நல்லாண்டில் நமது நாட்டில்
மேற்பத்து நாடும் மெச்சும்
மென் தமிழ் அரசுக் கட்சி

உருவான பொழுதிற் றுனே
ஒவ்வாத நிலைமை கண்டீர்!
பொருளோடு செல்வம் ஈட்டும்
புனிதப்பாட் டாளி கூட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாரிசு

"அரவிந்தன்" நாமத்தில் ஒரு குழந்தை
அவதரித்தான் உன்றன் அவதாரமோ!
வரமென்று கருதி நின் "வாரிசு" போல்
வாஞ்சையோ டிங்குநாம் வாழ்த்துகின்றோம்!

# ஆத்ம சாந்தி

மண்டலத் தெங்கணும் வாழுமெங்கள்
வம்சமும் மற்றினம் அத்தனையும்
லண்டன் நகர் முதல் இங்கிலாந்தில்
நாற்றிசைத் தமிழர்கள் நாங்களுமாய்

அஞ்சலித்தோம் ஆத்ம சாந்தி கொள்க!
அமரரே! நலம் ஆத்ம சாந்தி கொள்க!
தெண்டனிட்டோம் ஆத்ம சாந்தி கொள்க!
தேவராய் இனி ஆத்ம சாந்தி கொள்க!

## எதிரொலி :- "அசரீரி"

நண்பர்க்கும் எதிரிக்கும் என்னபேதம்?
நம்பிக்கை வைப்பதால் என்ன லாபம்?
வெண்கொத்து மலர்விஷப் பாம்பாகினுல்
வேறுநாம் ஆரையே தோழரென்போம்!

## தாரகை:

எண்பத்து ஒன்பதாம் இவ்வாண்டிலே
ஏழாவதாம் திங்கள் பதின்முன்றிலே
மண்விட்டு விண்ணடைந் தேகினீரோ!
வானிலோர் தாரகை ஆகினீரோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபம்

வெளியிடுவோர் தமிழர் விடுதலைக் கூட்டணி
இங்கலாந்துக் கிளை - அமைப்பாளர்
திரு தில்லை - அருள்தாஸ் அவர்களும்
இங்கிலாந்து வாழ் தமிழர்கள் அனைவரும்

பாக்கள் : பரிதாபி -
லண்டன் - 23-09-1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org